# <u>சாதாரண கூட்டம்</u>

**2023– ம் ஆண்டு ஜனவரி மாதம் 11–ம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணியளவில் சாதரணக் கூட்டம் வடலூர் நகராட்சி நகர் மன்ற கூட்ட அறங்கில் நகர்மன்ற தலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.**

**முன் லை திரு. சு. சிவக்குமார்**
**நகர்மன்ற தலைவர்**
**வடலூர் நகராட்சி**

**மன்றப்பொருள் எண்: 1**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (2022 2023) ன் கீழ் வார்டு 01 இராமமூர்த்தி ரெட்டியார் நகரில் சர்வே எண். 36/7, 37/1 பூங்கா அமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் நாள். 02.11.2022 நிர்வாக அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 22.11.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 37.00 | மதிப்பீட்டிற்கு 0.01% குறைவு |
| 2 | ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன் | 37.00 | மதிப்பீட்டிற்கு 0.23% அதிகம் |

**ந.க.எண்.962/12/2022/இ1**

<u>அலுவலக குறிப்பு</u> **: -**

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.01% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை ஆணை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் எண்: 2</u>**

வடலூர் நகராட்சியில் உள்ள ஆணையர் அறை மற்றும் கழிப்பறை பராமரிப்பின்றி பழதடைந்துள்ளது. மேலும், அலுவலகம் பின்புறம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்துவதற்கு உள்ள கழிப்பறை மிகவும் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் அலுவலக பணியாளர்கள் அனைவரும் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறைக்கு செல்லும் போது மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, கழிவறையில் உள்ள பழுதுகளை சரி செய்திடவும் மற்றும் ஆணையர் மற்றும் பொறியாளர் அறைக்கு புதியதாக மேசை, நாற்காலிகள் வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம். 3.50 (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். 1349/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப் பொருள் எண்:</u>  3**

வடலூர் நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 350 இலட்சம் மதிப்பிட்டில் பணி மேற்கொள்ள இந்நகராட்சியின் பின்புறம் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் தேர்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு பணி துவங்க உள்ள நிலையில் நகர் மன்ற தீர்மானம் எண் 229 நாள் 29.11.2022ல் நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் பிரதிவாரம் சனிக்கிழமைகளில் கடலூர் விருத்தாசலம் பிரதான சாலையில் நடைபெறும் வாரச்சந்தையானது வாகன போக்குவரத்திற்கும். பொது மக்களுக்கும் இடையூறாக நடைபெற்று வருவதால் மேற்படி வார சந்தையினை உழவர் சந்தைக்கு பின்புறம் தற்காலிகமாக இந்நகராட்சிமூலம் ஏற்கனவே மீன் அங்காடி நடத்தப்படும் இடம் புல எண் 2/6ல் மாற்றம் செய்ய அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் தற்சமயம் உள்ள இரசக்கர வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மேற்கூரையினை அகற்றி உழவர் சந்தையின் பின்புறம் தற்காலிகமாக அமைத்திடவும், அதற்கான செலவினம் 3.00 (ரூபாய் முன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். 1350/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u> : 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் எண்:  4</u>**

வடலூர் நகராட்சியின் புகழ்பெற்ற வள்ளலார் தெய்வ சக்தி பெற்ற சத்தியஞான சபையில் தைபூசம் திருவிழா நடைபெற இருப்பதால், அத்திருவிழாவினை வடலூர் நகராட்சியின் சார்பாக நடத்தப்படுவதால், பொது சுகாதாரபிரிவிற்கான தளவாட பொருட்கள் வாங்குவதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டி பர்ப்பஸ், திருச்சி அவர்களிடம் வாங்குவதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.00 (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 1352 /.2022/எச்1

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் எண்:  5</u>**

வடலூர் நகராட்சியின் புகழ்பெற்ற வள்ளலார் தெய்வ சக்தி பெற்ற சத்தியஞான சபையில் தைபூசம் திருவிழா நடைபெற இருப்பதால், அத்திருவிழாவினை வடலூர் நகராட்சியின் சார்பாக நடத்தப்படுவதால், பொது சுகாதாரபிரிவிற்கான டெமிபாஸ் 40லிட்டர், பைரித்திரியம் 60லிட்டர் மற்றும் மாலித்தீன் 40லிட்டர் வாங்குவதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.00 (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 1352 /.2022/எச்1

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் எண்: 6</u>**

வடலூர் நகராட்சியின் புகழ்பெற்ற வள்ளலார் தெய்வ சக்தி பெற்ற சத்தியஞான சபையில் தைபூசம் திருவிழா நடைபெற இருப்பதால், அத்திருவிழாவினை வடலூர் நகராட்சியின் சார்பாக நடத்தப்படுவதால், 5 நகராட்சியிலிருந்து துப்புரவு ஆய்வர், துப்புரவு மேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் சுமார் 175 நபர்கள் வருகை புரிவார்கள் மேலும் அவர்களுக்கான தினசரி உணவு மற்றும் தங்கும் வசதிகள் செய்து கொடுக்கவும், அதற்கான தோராய செலவினம் 2.00 (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 1353/2022/எச்1

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் எண்: 7</u>**

வடலூர் நகராட்சியின் புகழ்பெற்ற வள்ளலார் தெய்வ சக்தி பெற்ற சத்தியஞான சபையில் தைபூசம் திருவிழா நடைபெற இருப்பதால், அத்திருவிழாவினை வடலூர் நகராட்சியின் சார்பாக நடத்தப்படுவதால், இந்நிகழ்ச்சிக்கு உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து பக்தர்கள் சபையில் தங்கி திருவிழாவினை கண்டுகளிக்கும் நிலையில் இந்நகராட்சி மூலம் தற்காலிகமாக கட்டப்படும் கழிவறை சுத்தம் செய்யும் பணிக்கு 40 நபர்கள் தினகூலி பணியாளர்களைக்கொண்டு நான்கு தினங்கள் பணிகள் மேற்க்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம். 60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 1354/2022/எச்1

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் எண்: 8</u>**

வடலூர் நகராட்சி (முன்னாள் பேருராட்சி) தரம் உயர்த்தப்பட்டு 17.12.2021 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இறைவன் ஒளி வழியில் அருளுகிறார் என்பதை உணர்த்த வடலூரில் வள்ளலார் சத்திய ஞான சபையை உருவாக்கினார். எண்கோண வடிவில் அமைந்த இச்சபையின் அருகில் தருமசாலை அமைத்து அன்னதானத்தை துவங்கினார். விரைவில் வள்ளலார் சர்வதேச மையம் அமைய உள்ளதாலும், வள்ளலார் 200வது பிறந்த நாளை முன்னிட்டும் கடலூர்– விருத்தாசலம் தேசிய நெடுஞ்சாலையில் சத்திய ஞானசபை நுழைவாயிலின் இருபுறமும் Ornamental Double arm Pole 7m கொண்ட LED மின்விளக்குகள் அமைத்து தருமாறு நகர்மன்ற தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்தன் அடிப்படையில் மேற்கண்ட LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு SOR ல் விலை இல்லாத காரணத்தினால் விலைப்புள்ளி பெற்று மதிப்பீடு தயார் செய்து ஏதேனும் அரசு மான்யத்தில் ரூ. 125 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.919 /2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஏதேனும் அரசு மான்யத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 9**

வடலூர் நகராட்சி அலுவலக உபயோக பயன்பாட்டி இருந்த Xerox Machine (Canon image RUNNER 2420L) 10 ஆண்டுகளுக்கு முன்பாக தருவிக்கப்பட்ட இயந்திரம் ஆகும். தற்போது மேற்படி Xerox Machine பழுதடைந்து பயன்படுத்த முடியாமலும், மீளவும் பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையிலும் உள்ளது. மேலும். அலுவலக பயன்பாட்டிற்கு Xerox Machine அவசியம் தேவைப்படுவதால் புதியதாக ஒரு நவீன மயமாக்கப்பட்ட புதிய Canon Xerox Machine ஒன்று உரிய விதிமுறைகளை பின்பற்றி இந்நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இந்நகராட்சி வருவாய் நிதியில் வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

கோப்பு எண். 1352 /2022/அ1

அலுவலக குறிப்பு : மேற்படி Xerox Machine பழுதடைந்து பயன்படுத்த முடியாமலும், மீளவும் பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளதற்கு Canon நிறுவனத்தால் Condamination சான்று பெறப்பட்டுள்ளதால் புதிய இயந்திரம் வாங்க மன்றம் அனுமதி வழங்கலாம்,

**மன்றப்பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட கண்காட்சி நகரை சார்ந்த திரு . ஆர். கண்ணையன் என்பவர் குடிநீர் இணைப்பு வேண்டி 2013ல் டேவணி தொகை செலுத்தியுள்ளார். உரிய மற்றும் உயர்த்தப்பட்ட டேவணி மற்றும் சென்டேஜ் தொகை செலுத்தியும் இதுநாள் வரை குடிநீர் இணைப்பு கிடைக்கப்படாத காரணத்தினால் மேற்படி மனுதாரர் கடலூர் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண் 183/2022) தொடர்ந்துள்ளார், மேற்படி கண்காட்சி நகருக்கு குடிநீர் இணைப்பு வழங்க இந்நகராட்சி பொறியாளரால் தள ஆய்வு செய்ததில் 200 மீட்டர் தூரம் சிமெண்ட் சாலைகளை உடைத்து பள்ளம் தோண்டி 90mm PVC குடிநீர் குழாய் பதித்து குடிநீர் இணைப்பு வழங்க ரூ.1. 00 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பணியினை உடன் மேற்கொண்டு மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் வேண்டும் என்பதால் மேற்படி பணியினை விரைந்து முடிக்கவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். 1160 /2022/அ1

அலுவலக குறிப்பு : மேற்படி செலவினம் நீதி மன்ற வழக்கு தொடர்பானது மற்றும் பொது மக்களின் குடிநீர் பிரச்சனை என்பதால் மன்றம் அனுமதிக்கலாம்,

**மன்றப்பொருள் எண்: 11**

வடலூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 19.93 ச.கிமீ ஆகும், 27 வார்டுகளை கொண்ட இந்நகராட்சியின் தற்போதைய தோராய மக்கள் தொகை 44108 ஆகும். இந்நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 27 வார்டுகளிலும் தூய்மை பணிகள் மேற்கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 22 தூய்மை பணியாளர்கள் மட்டுமே. இதில் 3 நபர்கள் பணி ஓய்வு மற்றும் ஒருவர் பணியிடையில் இறந்தது போக தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 17 தூய்மை பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். மேலும், துப்புரவு ஆய்வர், மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாத காரணத்தினாலும், பணியாளர்கள் பற்றாக் குறையினால் Out sourcing மூலம் 59 பணியாளர்கள் அமர்த்தப்பட்டு பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேலும் இதில் 45 பணியாளர்கள் மட்டுமே துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இதர 14 Out sourcing பணியாளர்கள் தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் வினியோகம் மற்றும் ஓட்டுநர்களாகவும் பணியாற்றுகின்றார்கள், இந்நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் முழுமையாக தூய்மை பணிகள் மேற்கொள்ள போதுமான பணியாளர் இல்லாத காரணத்தினால் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் அவசர அவசியம் கருதி கூடுதலாக 20 (எண்ணிக்கைகள்) பணியாளர்கள் தூய்மை பணிகள் செய்ய Out sourcing மூலம் அமர்த்திகொள்ளவும். இதற்கான கூடுதல் செலவினம் ரூ. 30.00 லட்சம் இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

கோப்பு எண். 03 /2022/எச்1

அலுவலக குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படும பணி மற்றும் செலவினம் என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 12**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்களின் வாசிப்பு திறன், கல்வி ,பொது அறிவு திறனை மேம்படுத்துதல் மற்றும் போட்டி தேர்வுகள் எழுத தினசரி நாளிதழ் என்பது ஒரு முக்கியமான முதற்கட்ட தரவாகும். அந்த வகையில் மாணவ, மாணவிகள் தினசரி நாளிதழ் படித்து தங்களது வாசிப்பு திறனை மேம்படுத்தும் வகையில் பள்ளிகளுக்கு ரூ. 4.00 (ரூபாய் நான்கு மட்டும்)க்கு சலுகை விலையில் வழங்க தினகரன் நிறுவன பொது மேலாளர் ஒப்புதல் அளித்துள்ளார். எனவே, மேற்படி நிறுவனத்தின்மூலம் வடலூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் விவரப்படியான பள்ளிகளுக்கு தினகரன் தமிழ் நாளிதழ் சலுகை விலையில் பள்ளி ஒன்றுக்கு சராசரி 5 நாளிதழ் வீதம் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு மட்டும் சப்ளை செய்ய மேற்படி நிறுவனத்திற்கு இசைவு கடிதம் வழங்கவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ. 30000/. இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 13**

வடலூர் நகராட்சி பொதுமக்கள் நலன் கருதி நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்று வார்டு எண். 1 முதல் 27 வார்டுகளுக்கும் 4x4 குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள், CFL விளக்குகள் அதற்கான உதிரி பாகங்கள் மற்றும் புதிய 100W LED விளக்குகள் வாங்க இந்நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.00லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**கோப்பு எண். /2022/இ1**

**அலுவலக குறிப்பு :** பொது மக்களின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 14**

இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021–2022 மற்றும் பொது நிதி 2021–2022 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற நிர்வாக அனுமதியினை தொடர்ந்து 10.06.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டது. தற்சமயம் நிர்வாக நலன் கருதி கீழ் காணும் விவரப்படியான ஒப்பந்தபுள்ளியை ரத்து செய்திடவும், அதற்காக செலுத்தப்பட்ட 1 % டேவணித் தொகையினை ஒப்பந்ததாருக்கு திரும்ப வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் | குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 15வது நிதிக்குழு மான்யம் 2021–22TIED GRANT | | | |
| 1 | 50 லிட்டர், 80 லிட்டர் அளவு கொண்ட பிவிசி குப்பை தொட்டி (PVC Dust Bin) சப்ளை செய்தல் | 1.தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.20% (-)<br>2.திரு. ஸ்டாலின் 0.50%(+) | தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.20% (-) குறைவு |
| 15வது நிதிக்குழு மான்யம் 2021–22UNTIED GRANT | | | |
| 2 | பூசாலிக்குப்பத்தில் ஏற்கனவே உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்களில் 2 மெட்ரிக் டன் அளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு கட்டுதல் | 1.தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.15% (-)<br>2.திரு. ஸ்டாலின் 0.60%(+) | தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.15% (-) குறைவு |
| 3 | வார்டு எண். 8 என்.எல்.சி. ஆபிசர் நகரில் உள்ள வளமீட்பு மையம் (RRC Centre) புனரமைப்பு பணி மேற்கொள்ளுதல் | 1.தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.10% (-)<br>2.திரு. ஸ்டாலின் 0.70%(+) | தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.10% (-) குறைவு |
| 4 | பூசாலிக்குப்பத்தில் உள்ள உரக்கிடங்கில் கண்வேயர் பெல்டுடன் கூடிய உர அறவை இயந்திரம் ( Organic Shredder) | 1.தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.25% (-)<br>2.திரு. ஸ்டாலின் 0.90%(+) | தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.25% (-) குறைவு |

| பொது நிதி 2021–2022 | | | |
|---|---|---|---|
| 5 | வார்டு 01 முதல் 27 வார்டுகளில் அமைந்துள்ளஆழ்துளை கிணறுகளுக்கு தேவையான பம்பு, மோட்டார், பேனல் போர்டு , ஸ்டார்டர் மற்றும் கேபில்கள் வாங்கும் பணிக்கு | 1, திரு. ஸ்டாலின் 0.12%(.)<br>2, தேவி கன்ஸ்ட்ரக்ஷன் 0.70% (+) | மதிப்பீட்டிற்கு 0.12%குறைவு |

ந.க.எண்.423/10/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u>:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கக்காணும் டேவணித் தொகை 1% ஒப்பந்ததாருக்கு திரும்ப வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சியில் வார்டு எண். 05 பழைய EB ஆபிஸ் தெருவில் ஒன்று மற்றும் மூன்றாவது குறுத்தெருவில் 3 கம்பங்கள் இடமாற்றம் செய்து தருமாறு வரப்பெற்ற நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதத்தினை தொடர்ந்து ஆணையர் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பட்டு, மின் கம்பம் இடமாற்றம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல்படி தொகை 61120/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். 1027/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u> நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகைரூ. 61120/– செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 16**

வடலூர் நகராட்சியில் 43/4 ல் ஹெக் 0.44.5 மூச்சான் குளம் அருகில் ஊர் பொதுமக்களுக்கு போர் புதியதாக அமைக்கப்பட உள்ள போர்வெல்லுக்கு வடலூர் நகராட்சி பெயரில் மின் இணைப்பு பெறுவதற்கு இளமின் பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல்படி தொகை ரூ. 58,800/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். 735/2022/இ11

<u>அலுவலக குறிப்பு</u> நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகைரூ. 58,800/– செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் எண்: 17**

வடலூர் நகராட்சியில் வார்டு எண். 04 பழைய பக்தா நகர் 2வது தெரு ஆபத்தாரணபுரத்தில் இரண்டு கம்பங்கள் இடமாற்றம் செய்து தருமாறு நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதத்தினை தொடர்ந்து ஆணையர் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பட்டு, மின் கம்பம் இடமாற்றம் தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மேற்காணும் இடத்திற்கு மின்கம்பம் இடமாற்றம் செய்திட ரூ.52360/– க்கு கேட்புப்பட்டியல் வரப்பட்டுள்ளது. வரப்பட்டுள்ள பட்டியலுக்கான தொகை ரூ.52360/– செலுத்திடவும், அச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 1026/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u> : நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ. 52360/– செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 18**

வடலூர் நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 350 இலட்சம் மதிப்பிட்டில் பணி மேற்கொள்ள இந்நகராட்சியின் பின்புறம் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் தேர்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு பணி துவங்க உள்ள நிலையில் நகர் மன்ற தீர்மானம் எண் 229 நாள் 29.11.2022ல் நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் பிரதிவாரம் சனிக்கிழமைகளில் கடலூர் விருத்தாசலம் பிரதான சாலையில் பிரதிவாரம் சனிக்கிழமைகளில்

நடைபெறும் வராச்சந்தையானது வாகன போக்குவரத்திற்கும். பொது மக்களுக்கும் இடையூராக நடைபெற்று வருவதால் மேற்படி வார சந்தையினை உழவர் சந்தைக்கு பின்புறம் தற்காலிகமாக இந்நகராட்சிமூலம் ஏற்கனவே மீன் அங்காடி நடத்தப்படும் இடம் ச. எண் 2/6ல் மாற்றம் செய்ய அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் தற்சமயம் உள்ள இரசக்கர வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மேற்கூரையினை அகற்றி உழவர் சந்தையின் பின்புறம் தற்காலிகமாக அமைத்திடும் பணிக்கு 23.12.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு ( ரூபாய் லட்சத்தில் ) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| 1 | Devi construction - Cudalore | 3.00 | 0.05% குறைவு |
| 2 | Sri Sembaiyanar Construction - | 3.00 | 0.25% அதிகம் |

கோப்பு எண்.1350/2022/இ1.

**<u>அலுவலக குறிப்பு</u> :** 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Devi construction - Cudalore ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை ஆணை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 19**

குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டாட்சியர் கடிதம் ந.க.எண் ஆ1/2899/2022 நாள் 15.11.2022ல் கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டம் ஆபத்தாரணபுரம் கிராம புல எண் 143/1 ல் 0.61.0 ஏர்ஸ் வண்டிப்பாதை புறம்போக்கில் குடியிருந்துவரும் 5 நபர்களுக்கு இலவச வீட்டு மனைகள் பட்டா வழங்க நகராட்சி ஆணையர் வடலூர் அவர்கள் தடையில்லா சான்று வழங்க கோரியுள்ளார். மேற்கண்ட இடம் கிராம கணக்கில் வண்டிப்பாதை என உள்ளது. எனவே, இதற்கு தடையில்லா சான்று வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1017.2022.எப் 1

அலுவலக குறிப்பு : மேற்கண்ட பொருள் குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்: 20**

வடலூர் நகராட்சி நான்காவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் கோரிக்கையின்படி PPS நகரில் 4 மின்கம்பங்கள் மற்றும் வள்ளிகந்தன் நகரில் 4 மின்கம்பங்கள் மற்றும் 6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி ஜெயப்பிரியா நகரில் 3 மின்கம்பங்கள், 2 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி வார்டு 2 வடக்குத் தெருவில் 2 மின்கம்பங்கள் மற்றும் 27 வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி ஆர்.சி. தெற்குத் தெருவில் 2 கம்பங்களை இடமாற்றம் செய்து தெருவிளக்கு விரிவாக்கம் செய்ய தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க. எண். 1237/2022/ இ1

அலுவலக குறிப்பு : பொது மக்களின் தெருமின் விளக்கு அவசர அவசியம் கருதி மேற்படி தெருவிளக்கு விரிவாக்கம் செய்யும் பணியினை அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 21**

நுகராட்சி நிர்வாக இணை இயக்குநர் (திட்டம்) அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண் 32454/2021/CFC நாள் 01.11.2021ன் படி வடலூர் நகராட்சியில் 15-வது நிதிக்குழு மான்யம் Health Grant 2021–2022 திட்டத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி ரூ 60.00 லட்சம், வட்டார பொது சுகாதார ஆய்வகம் கட்டும் பணி ரூ 50.00 லட்சம் மற்றும் துணை சுகாதார ஆய்வகம் கட்டும் பணிக்கு ரூ 30.00 லட்சம் ஆக மொத்தம் 140 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்குரிய வரைபடம், SOR, 2022-2023 மற்றும் GST 18% உயர்வின் காரணமாக அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாக 41.00 லட்சம் ஆக மொத்தம் ரூ.**181.00** லட்சம் ஆகின்றது. மேற்படி, பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட விவரப்படி திருத்திய நிர்வாக அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், கூடுதல் செலவினம் ரூ.41.00 லட்சம் தற்போது இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அட்டவணை

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் வளாகத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டும் பணி | 85.00 |
| 2. | லடலூர் நகராட்சி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் வட்டார பொது சுகாதார ஆய்வகம் கட்டடம் கட்டும் பணி | 56.00 |
| 3. | லடலூர் நகராட்சிக்குட்பட்ட சர்வே எண் 541/1 பார்வதிபுரத்தில் துணை சுகாதார நிலையம் கட்டடம் கட்டும் பணி. | 33.00 |
| | மொத்தம் | 174.00 |

ந.க. எண். 988/2022/இ1

அலுவலக குறிப்பு : வடலூர் நகரவாழ் பொதுமக்களின் நலன் கருதியும், மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதியும் கூடுதல் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதி (அ) 15th CFC Untied 2022- 2023 நிதியில் மேற்கொள்ளவும், அரசு நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள். 22</u>**

வடலூர் நகராட்சியானது இராண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 39514 ஆகும். நகரின் மொத்த பரப்பளவு 19.93 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள வள்ளலார் பேருந்து நிலையம் நகரின் மத்திய பகுதியில் சர்வே எண்.306/4 அமைந்துள்ளது. தற்போது வடலூர் நகராட்சி (முன்னாள் பேரூராட்சி ) இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தரம் உயத்தப்பட்டு வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள நகராட்சி அலுவலக பகுதி 1760 சமீ பரப்பளவை உள்ளடக்கி 6306 ச.மீ பரப்பளவில் விரிவாக்கம் செய்ய அரசாணை நிலை எண்.173 நாள்.08.12.2022 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப்பொறியாளர் அவர்களின் கடித ந.க.எண்.001/2022/DO1, நாள்.21.12.2022. ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 08.02.2023 ல் ஒப்பந்தப்புள்ளி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டடங்கள் விவரம் | கட்டப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் மற்றும் தரைதள கட்டடங்கள் | 1986 |
| 2 | முதல் தளம் கட்டடங்கள் | 2000 |
| 3 | கட்டணக்கழிப்பிட கட்டடங்கள் | 2000 |
| 4 | பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்கதொட்டி | 1976 |
| 5 | நகராட்சி அலுவலக கட்டடங்கள் | 1976 |

மேற்காணும் கட்டடங்களை உதவி செயற்பொறியாளர் பொதுபணித்துறை கட்டட (க&ப) உட்கோட்டம் கடலூர் அவர்களின் நேரடி ஆய்வு செய்து வடலூர் நகராட்சி பேருந்து நிலைய வணிக வளாக கடை கட்டடங்கள் மற்றும் நகராட்சி அலுவலக கட்டடங்கள் அனைத்தும் மேற்கூரை பெயர்ந்தும், சுவர்கள் சேதமடைந்தும் உறுதியற்ற நிலையில் உள்ளதாக கடித எண்.268(M) / கோ-99/ JDO-1/2022/ நாள்.13.09.2022ல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள பேருந்து நிலையம், சேதமடைந்த கடைகளின் கட்டடங்கள் , மழைநீர் வெளியேற வடிகால் வசதி மற்றும் நடைபாதை வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. எனவே, புதியபேருந்து நிலையம் அமைக்க பழைய பேருந்து நிலைய கட்டங்கள் , கடைகள், கட்டண கழிவறைகள், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நகராட்சி அலுவலக கட்டங்களை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

ந.க.எண். 137/2022/அ1

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 23**

வடலூர் நகராட்சியில் உள்ள உயர் மின் கோபுர விளக்குகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 2.70/– இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

கோப்பு எண் /2023/இ1

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 24**

வடலூர் நகராட்சியில் தைபூத்தை முன்னிட்டு வருகின்ற பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும் அதற்கான செலவினம் ரூ. 5.00/-மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண் /2023/இ1

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 25**

வடலூர் நகராட்சியில் உள்ள ஆணையர் அறை மற்றும் கழிப்பறை பராமரிப்பின்றி பழதடைந்துள்ளது. மேலும், அலுவலகம் பின்புறம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்துவதற்கு உள்ள கழிப்பறை மிகவும் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் அலுவலக பணியாளர்கள் அனைவரும் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறைக்கு செல்லும் போது மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, கழிவறையில் உள்ள பழுதுகளை சரி செய்திடவும் மற்றும் ஆணையர் மற்றும் பொறியாளர் அறைக்கு புதியதாக மேசை, நாற்காலிகள் வாங்கிடவும் **13.01.2023**ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி மேற்கெள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. ஸ்டாலின் | 3.50/- | மதிப்பீட்டிற்கு **0.35**% அதிகம் |
| 2. | திரு பி. பாலமுருகன் | 3.50/- | மதிப்பீட்டிற்கு - **0.11**% குறைவு |

கோப்பு எண். **1349/2022/இ1**

<u>அலுவலக குறிப்பு</u> : வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. பாலமுருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட **–0.11**% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 26**

வடலூர் நகராட்சி பொதுமக்கள் நலன் கருதி நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்று வார்டு எண். **1** முதல் **27** வார்டுகளுக்கும் 4x4 குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள், CFL விளக்குகள் அதற்கான உதிரி பாகங்கள் மற்றும் புதிய 100W LED விளக்குகள் வாங்க ரூ. **9.00–**லட்சம் ம மதிப்பீட்டில் மேற்கொள்ள **13.01.2023** தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி மேற்கெள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு<br>(ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம்<br>(அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1. | தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 9.00/- | மதிப்பீட்டிற்கு - 10.00% குறைவு |
| 2. | திரு எ. ஸ்டாலின் | 9.00/- | மதிப்பீட்டிற்கு 23.01% அதிகம் |

கோப்பு எண். 1349/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u> : வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தேவி கன்ஸ்ட்ரக்ஷன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட –10.00% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் எண்: 27</u>**

வடலூா் நகராட்சியில் பொறியியல் பிரிவில் போதிய அளவு பணியாட்கள் இல்லாத காரணத்தினால் 1. BE (Cvil) 1 எண்ணிக்கை, 2. DEC(Civil)1 எண்ணிக்கை தொழிட் நுட்ப உதவியாளர்கள் நிர்வாக நலன் கருதியும், பொதுமக்கள் நலன்கருதியும் 6 மாத காலத்திற்கு பணியமா்த்திக் கொள்ளவும் அவர்களுக்கான ஊதியம் ஊதியம் வழங்க தோராய செலவினம் ரூ.5.00'/–லட்சத்திற்கு 13.01.2023 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி மேற்கௌ்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு<br>(ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம்<br>(அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1. | தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 5.00/- | மதிப்பீட்டிற்கு 0.20% அதிகம் |
| 2. | திரு எ. ஸ்டாலின் | 5.00/- | மதிப்பீட்டிற்கு - 0.03% குறைவு |

கோப்பு எண். 1349/2022/இ1

<u>அலுவலக குறிப்பு</u> : வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு எ.ஸ்டாலின் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட –0.03% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 28**

வடலூா் நகராட்சியில் நடைபெற உள்ள தைபூச திருவிழாவிற்கு வருகை தரும் பக்தா்களுக்கு அடிப்படை வசதிகள் ரூ.5.00/-மிதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 25.01.2023–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 5.00/- | மதிப்பீட்டிற்கு 0.27% அதிகம் |
| 2 | திரு. ஸ்டாலின் | 5.00/- | மதிப்பீட்டிற்கு - 0.13% குறைவு |

ந.க.எண் 910/1/2022/அ1

<u>அலுவலக குறிப்பு</u>:- வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஸ்டாலின் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட–0.13% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 29**

வடலூர் நகராட்சியில் உள்ள ஞான சபையில் உள்ள உயர் மின் கோபுர விளக்குகளில் பராமரிப்பு பணிகள் ரூ.2.70 லட்சம்/– மதிப்பீட்டில் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 25.01.2023–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 2.70/- | மதிப்பீட்டிற்கு 0.21 % அதிகம் |
| 2 | திரு. ஸ்டாலின் | 2.70/- | மதிப்பீட்டிற்கு - 05% குறைவு |

ந.க.எண் 910/1/2022/அ1

<u>அலுவலக குறிப்பு</u>:- வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஸ்டாலின் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட–0.05% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 30**

15வது நிதிக்குழு மான்யம் 2021–2022 Un tide grant திட்டத்தின் கீழ் வடலூர் நகராட்சி வார்டு 3 பேரிய கலணியில் ரூ.10.00 மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கட்ட 13.01.2023 –ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 10.00/- | மதிப்பீட்டிற்கு - 0.12% குறைவு |
| 2 | திரு. ஸ்டாலின் | 10.00/- | மதிப்பீட்டிற்கு 0.22% அதிகம் |

ந.க.எண் **1258/2022/இ1**

**அலுவலக குறிப்பு:-** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன்ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட –0.12% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 31**

15வது நிதிக்குழு மான்யம் 2021–2022 Un tide grant திட்டத்தின் கீழ் வடலூர் நகராட்சி குடிநீர் பணிகிளுக்கு ரூ.2.20 மதிப்பீட்டில் Supply and delivery of 20–25 delta starter. Panel board 2 Nos and 600 m flat copper cable. சுப்ளை செய்ய 13.01.2023 –ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 2.20 /- | மதிப்பீட்டிற்கு - 0.28% குறைவு |
| 2 | திரு. ஸ்டாலின் | 2.20 /- | மதிப்பீட்டிற்கு 0.80% அதிகம் |

ந.க.எண் **1258/2022/இ1**

**அலுவலக குறிப்பு:-** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட–0.28% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தலைவர்**
**வடலூர் நகராட்சி,**